# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.C.C.21/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.5 |
| Name | : | . சுரேஷ்குமார் |
| Father’s Name | : | . ரங்கநாதன் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | . |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 06.08.2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

. எனக்கு சொந்த ஊர்தொண்டூர் ஆகும். தற்போது வேலை நிமிர்த்தமாக தேசூரில் இருந்து வருகிறேன். மின்சார துறையில் கேங்க் மேனாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களை தெரியும். அவர்கள் எனது மேல் அதிகாரிகள் ஆவார்கள். எனக்கு வருடம் ஞாபகம் இல்லை. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு எனது மேல் அதிகாரி பாஞ்சறை என்ற கிராமத்தில் ஒரு கம்பத்தில் இருந்து

ஒரு நபருக்கு லைன் கொடுக்க சொன்னார். அதன்பேரில் பாஞ்சறை கிராமத்தில் உள்ள ஒரு நபருக்கு போஸ்ட் கம்பத்தில் இருந்து லைன் எடுத்து கட்டினோம். மறுநாள் சென்று மீட்டர் பொறுத்தினோம். அதற்காக மெயின் மின்சாரத்தை துண்டித்தோம். அப்போது ஆஜர் எதிரி போஸ்ட் கம்பத்தில் ஏறி நாங்கள் இணைத்திருந்த மின் கம்பியை அவிழ்த்துவிட்டுவிட்டார். அது தொடர்பாக நான் மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்தேன் அவர் சொன்னதன்பேரில் திரும்பி வந்துவிடுமாறு கூறி புகார் கொடுத்துவிடலாம் என்று சொன்னதன்பேரில் அன்றைய தினம் வேலை முடித்து திரும்பி விட்டோம். அதன் பிறகு மறுநாள் காவல் துறையினர் மற்றும் என் உயர் அதிகாரிகளுடன் சென்று லைன் கொடுத்துவிட்டோம். இது சம்மந்தமாக புகார் கொடுத்த விவரம் தெரியாது. நான் வேலை செய்தபோது எதிரி என்னை தடுக்கவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

சம்பவ சமயத்தில் இருந்து நான் தற்போது வரை தேசூரில்தான் பணி புரிந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் என்ன மாதிரியான பணிசெய்து வருகிறேன் என்றால் அதிகாரியின் உத்தரவின்பேரில் மின் கம்பத்தில் இருந்து லைன் பிடித்து இணைப்பு கொடுப்பதும் மற்றும் மீட்டா ் பெட்டி பொறுத்துவதும ் ஆகும். நான ் மின ் கம்பம ் நட்ட அன்றே மின் இணைப்பு கொடுத்துவிட்டேனா என்றால் அன்றைய தினமே கொடுத்துவிட்டேன். எத்தனை மணிக்கு தொடங்கி எத்தனை மணிக்கு பணியை முடித்தேன் என்றால் 11 மணிக்கெல்லாம் கம்பம் நட்டுவிட்டோம். 2 மணி நேரம் எதிரி சொன்னதன்பேரில் வயலில் பரம்பு அடித்து முடித்த பிறகு இணைப்பு கொடுக்க சொன்னதன்பேரில் காத்திருந்தோம். 2 மணி நேரம் கழித்து இணைப்ப கொடுத்துவிட்டோம். மின் இணைப்பு கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் போர்மேன் சேவியர் மற்றும் கேங்க் மேன் வியஜகுமார், வைத்தியலிங்கம், சுரேஷ்பாபு, நித்தியானந்தம், ஜீவரத்தினம் ஆகியோர்கள் இருந்தார்கள். நாங்கள ் சம்பவ சமயத்தில ் கொடுத்த மின ் இணைப்பு தற்போது வரை மாற்றம் செய்யப்படாமல் இருந்து வருகிறதா என்றால் மாற்றி கொடுக்கப்பட்டுள்ளது. நான் எனது மேல் அதிகாரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.